# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஹேவிளம்பி, ஆனி 14, திருவள்ளுவர் ஆண்டு–2048

## 2017 ஜூன் 28, புதன்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*“இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்*
*வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு.”*

*ஊற்று நீர், மழை நீர் ஆகிய இருவகை நீர் வளமும், மலை வளமும், அதிலிருந்து அருவியாகக் கொட்டி ஆறாகப் பெருகிவரும் ஆற்று நீர் வளமும், வலிமைமிக்க கோட்டையும் ஒரு நாட்டின் உறுப்புகள் ஆகும்.*

### 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 91, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன், மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**91—**

### நூலகம்

***13035—திரு. சபா. ராசேந்திரன்:**

*மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், கீழிருப்பு ஊராட்சியில் நூலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், கீழிருப்பு ஊராட்சியில் நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து வழங்குமாறு பண்ருட்டி வட்டார வளர்ச்சி அலுவலர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். அவ்வாறு தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்2டு பெறப்படும்பட்சத்தில், அங்கே நூலகம் அமைப்பதற்குப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.*

**திரு. சபா. ராசேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி தொகுதியிலுள்ள பண்ருட்டி ஒன்றியம், கீழிருப்பு ஊராட்சியில் இருக்கின்ற மாணவர்கள், படித்த இளைஞர்கள், பட்டதாரிகள், இளம் பெண்கள் எல்லோரும் அந்தப் பகுதியில் நூலகம் அமைத்துத் தர வேண்டுமென்று என்னிடம் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் நூலகம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டிருக்கிறேன். நிபந்தனைகள் என்று சொல்கின்றபோது, அங்கே 2007–2008 ஆம் ஆண்டிலேயே AGMT மூலம் ஒரு நூலகக் கட்டடம் கட்டப்பட்டு, நல்ல நிலையில் இருக்கிறது. எனவே, வேகமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற பள்ளிக் கல்வித் துறைமூலம் இந்த நூலகத்தை உடனே அமைத்துத் தர ஆவன செய்து, நிறைவேற்றித் தருவாரா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

*2017 ஜூன் 28*]

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியதைப்போல (மேசையைத் தட்டும் ஒலி) மாற்றார்களாக இருந்தாலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதல்களின்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெறுகிற இந்த அரசின் கல்வித் துறை, உறுப்பினரது கோரிக்கையை நிறைவேற்றும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.*

**திரு. சபா. ராசேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பள்ளிகளைத் தரம் உயர்த்துவது குறித்த கேள்விகள் வரும்போது துணைக் கேள்வி கேட்க கரம் உயர்த்துவேன். அப்பொழுதெல்லாம் எனக்கு வாய்ப்பளிக்காத காரணத்தினால், இப்பொழுது கேட்கிறேன். எனது தொகுதியிலுள்ள இந்திரா நகர் அரசு உயர்நிலைப் பள்ளி தரம் உயர்த்தப்படுவதற்கு அரசு விதித்திருக்கும் அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்திருப்பதால், அதை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன் வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் இப்போது கேட்டு, அமைகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வி, மூல வினாவிற்கு மாற்றாக இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை மனதிற்கொண்டு, அவர் தொகுதியிலுள்ள இந்திரா நகர் பகுதியில் வாழ்கின்ற மாணவர்களுடைய நலன்கருதி, தரம் உயர்த்துவதற்குத் தேவையான நிபந்தனைகளை அப்பள்ளி பூர்த்தி செய்திருந்தால், இந்த ஆண்டே அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் அவர்கள்.

**திரு. ப. ஆடலரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டியில் பழமைவாய்ந்த அரசு மேல்நிலைப் பள்ளி ஒன்று 100 ஆண்டுகளுக்கும் மேலாக உள்ளது. அதிலுள்ள நூலகம் 20 ஆண்டுகளாக மூடப்பட்டிருந்து, தற்போதுதான் திறக்கப்பட்டுள்ளது. வௌவால்கள் புகுந்து, அக்கட்டடம் சீர்கெட்டுள்ளதால், அதனுள்ளே நுழைய முடியாத சூழ்நிலை உள்ளது. அதை மேம்படுத்துவதற்கும், நூலகத்திற்குத் தேவையான புதிய புத்தகங்களை வழங்குவதற்கும் அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–05

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறையினுடைய மானியக் கோரிக்கையின்போது நான் குறிப்பிட்டுள்ளதுபோல், 32 மாவட்டங்களிலே Civil Service Training என்ற முறையில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். எழுதுகிற மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கின்ற நிலையையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலில் நடைபெறுகின்ற இந்த அரசு நிறைவேற்றித் தரும் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

நூலகத்தில் வௌவால்கள் நிறைந்திருக்கின்றன என்று சொன்னார்கள். அதற்கென்று சில மருந்துகள் இருக்கின்றன. வனத் துறையின் மூலமாக அதை உபயோகப்படுத்தினாலே வௌவால்கள் அந்தப் பகுதிக்கு வராது. மேலும், உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு, புதிய நூல்களை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன் அவர்கள்.

*2017 ஜூன் 28]*

**திரு. ப. ரங்கநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள ஊராட்சி நூலகங்களில், இன்றிருக்கின்ற சூழ்நிலையில், புத்தகங்கள் வாசிப்பவர்களுடைய எண்ணிக்கை குறைந்து கொண்டேயிருக்கின்றது. அதை ஊக்குவிக்கின்ற வகையில் தமிழகத்தினுடைய ஊராட்சிகளிலும், நகராட்சிப் பகுதிகளிலும், மாநகராட்சிப் பகுதிகளிலும், நகர்ப்புறங்களிலும் நூலகங்களை அதிகமாக உருவாக்கி, படிப்பதற்கான வசதிகளை இந்த அரசு உருவாக்கித்தருமா என்பதையும், அதேநேரத்தில், அனைத்துவிதமான புதிய வகை நூல்களையும் நூலகங்களுக்கு வாங்கித் தந்து, நூலகத்தினுடைய தரத்தை உயர்த்துவதற்கும் இந்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, ஏறத்தாழ 191 இடங்களிலே கம்ப்யூட்டர் இல்லாத முழுநேரக் கிளை நூலகங்களை உருவாக்குவதற்கு நாங்கள் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம். தமிழகத்தைப் பொறுத்தவரையில், 4,603 நூலகங்கள் இருக்கின்றன. அந்த நூலகங்களில் சிறப்பான நூல்களைத் தேர்வு செய்து, மாணவர்களுக்கு ஏற்ப எந்தெந்த நூல்களை அங்கே வைக்கலாம் என்ற முறையிலும், அதேநேரத்தில் பெற்றோர்களும் வாசிக்கின்ற அளவுக்கு, எந்த நூல்கள் அங்கே இடம்பெற வேண்டும் என்பதையும் இந்த அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. இந்த அரசு ஓராண்டு காலத்திற்குள் உங்கள் குறைகள் எதுவாக இருந்தாலும் நிவர்த்தி செய்து காட்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள்.*

**திரு. கே.எஸ். தென்னரசு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில் கொண்டிருக்கும் திசை நோக்கி வணங்கி, மாண்புமிகு முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘ஒரு நூலகத்தைத் திறந்து வைத்தால், 10 சிறைச்சாலைகளை மூடுவதற்குச் சமம்’ என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 2001 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரை நூலகக் கட்டடம் கட்ட அனுமதிக்கப்பட்டது. தற்போது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நூலகக் கட்டடம் கட்டுவதற்கு அனுமதி கொடுப்பதில்லை. அறிஞர் அண்ணா அவர்கள் நூற்றாண்டு விழா நூலகத்திற்கு 5 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்த மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே பரிந்துரை செய்து, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நூலகக் கட்டடம் கட்டுவதற்கு அரசாணை வழங்க ஆவன செய்வார்களா என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலில் நடைபெறுகிற இந்த அரசில், மாண்புமிகு உறுப்பினர் தென்னரசு கேட்டதற்குப் பிறகு தடை இருக்காது. உங்களுடைய நிதியைத் தருவீர்களேயானால் வரவேற்கும். (குறுக்கீடு) இரண்டு தென்னரசு இருக்கிறீர்கள். நீங்கள் முன்னாள் கல்வி அமைச்சர். இந்நாள் சட்டமன்ற உறுப்பினர் ஈரோட்டைச் சார்ந்தவர், தென்னரசு என்ற முறையிலே நான் சொன்னேன். அவர்தான் கேள்வி கேட்டார். ஆகவே, உங்களுக்கு எந்த ஐயமும் தேவையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கா. கதிர்காமு அவர்கள்.

**டாக்டர் கா. கதிர்காமு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி புரிந்து வருகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பள்ளிக் கல்வித் துறையில்

*2017 ஜூன் 28*]

*இதுவரையில்லாத சரித்திரங்களையெல்லாம் உடைத்தெறிந்து, நல்ல பல திட்டங்களையெல்லாம் பள்ளிக் கல்வித் துறைக்கு அறிவித்து, சிறப்பு சேர்த்துள்ள பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*எங்களது தேனி மாவட்டத்திலே, தேனி நகரத்தில் மட்டும் ஒரேயொரு அரசு மேல்நிலைப் பள்ளி உள்ளது. அது இருபாலர் பள்ளி. அங்கே பல்வேறு தனியார் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. ஆனால், அந்த இருபாலர் படிக்கின்ற உயர்நிலைப் பள்ளியை இரண்டாகப் பிரித்து, ஆண்களுக்குத் தனியாகவும், பெண்களுக்குத் தனியாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் பள்ளி தேனி–அல்லிநகரத்தில் இருக்கிறது. அந்தப் பள்ளியில் மாணவர்களும், மாணவிகளும் அதிகமாக இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். நிபந்தனைகளுக்கேற்ப அந்தப் பள்ளியைப் பிரிப்பதற்குண்டான இடவசதி மற்றும் அனைத்து வசதிகளும் மற்றும் மாணவிகளின் எண்ணிக்கையும் அதிகமாக இருக்குமேயானால், அப்பள்ளியை ஆண்கள் மற்றும் பெண்கள் பள்ளிகளாகப் பிரிப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதல் பெற்று, அதற்கான உத்தரவு வழங்கப்படும்.*

*மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, தமிழகத்தில் பல்வேறு மாற்றங்களை கல்வித் துறை உருவாக்கியிருக்கிறது என்று சொன்னார்கள். இன்னும் பெரிய மாற்றங்களை நீங்கள் காணப் போகிறீர்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 92, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி, மாண்புமிகு நகராட்சி*